

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் 140 அ வட்டத்தில் ஜோன்ஸ் சாலை காரணித்தோட்டம் மெயின்ரோடு சந்திப்பில் தொடங்கி வாக்குச் சேகரித்தார். இந்நிகழ்வில் பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, கழக அமைப்பு துணைச்செயலாளர் ப.தாயகம்கவி, பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், வட்ட கழக செயலாளர் ந.தமிழரசு, காங்கிரஸ் ஜோதிபொன்னம்பலம், வி.சி.க.–ம.ஜேக்கப், தே.மு.தி.க – ஆனந்தன், ம.நீ.ம. – கதிர், எஸ்.டி.பி.ஐ. – அபுதாகிர், பிலால், இ.யூ.மு.லீக் – கவுஸ் ஃபேக், த.மு.மு.க சாகுல்ஹமீது, அப்துல் ஜபார், சி.பி.ஐ. – சிவா, சி.பி.எம்.–வேல்முருகன், உள்ளிட்ட ஏராளமான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியினர் பங்கேற்றனர்.

### சென்னையின் அடையாளத்தை மாற்றுகின்ற வகையில்

# முதல்வர் பல்வேறு திட்டப் பணிகளைச் செய்துள்ளார்!

## மா.சுப்பிரமணியன் – செய்தியாளர்களிடம் பேட்டி!

சென்னை, ஏப்.13-

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி - சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு. கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் நேற்று (12-4-2026) காலை 6.30 மணியளவில் ரேஸ்கோஸ் மைதானத்தில் நடைப்பயிற்சியின் போது செய்தியாளர்களைச் சந்தித்தார்.



அப்போது அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு மன்னர்கள் மக்களுக்கு செய்து, அது இன்றைக்கும் நிலைத்து நிற்பது போன்ற பணிகளை, கடந்த 5 ஆண்டுகாலத்தில் முதலமைச்சர் அவர்கள் பல்லாயிரம் கோடியிலான பல நூற்றாண்டு நிலைத்திருக்கும் பணிகளை செய்துகொண்டிருப்பதாக தெரிவித்தார். அதன் விவரம் வருமாறு:

சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிண்டி ரேஸ்கோர்ஸ் நடைபெற்றுவரும் பணிகள் - 160.86 ஏக்கரில் 250 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்து இங்கு குதிரைப்பந்தயம் கலைக்கட்டி வந்தது. இந்த குதிரைப் பந்தயத்தினால் பெரிய அளவில் பாதிக்கப்படுபவர்கள் ஏழை எளியவர்கள் மட்டுமே. நாங்கள் தொடர்ந்து சைதாப்பேட்டையில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக இருந்து வருவதால், இதில் பாதிப்புக்குள்ளானவர்களை நேரடியாகப் பார்த்திருக்கிறோம்.

ஏராளமான பேர் இந்த குதிரைப்பந்தயத்தில் அவர்களுடைய ஒட்டுமொத்த வருமானத்தையும் இழந்து, உயிரிழந்தவர்கள் ஏராளம். மனநோயாளிகளாக அலைந்து கொண்டிருப்பவர்களும் ஏராளம். அந்த வகையில் இந்த கிண்டி ரேஸ்கோஸ் மைதானம் பலரை பழிக்கொண்டிருக்கிறது.

1974ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆக.17ஆம் தேதி கிண்டி ரேஸ்கோஸ் மைதானத்தில் இனிமேல் குதிரைப்பந்தயம் நடக்காது என்கிற வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். குதிரைப்பந்தயம் தடைவிதிக்கப்பட்டதன் விளைவாக, குதிரைப்பந்தயம் நிறுத்தப்பட்டது என்பதற்கு அடையாளமாக, இன்றும் அண்ணா மேம்பாலம் அருகே நினைவுச்சின்னமாக குதிரை சிலை ஒன்று நிறுவப்பட்டு ள்ளது.

இங்கே இருந்த நிர்வாகத்தால் நீதிமன்றங்களுக்கு சென்று வழங்கு நடத்தி, குதிரைப்பந்தயத்தை மீண்டும் தொடர்ந்து கொண்டிருந்தனர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்த குதிரைப்பந்தயத்தை நிறுத்த வேண்டுமென்று நினைத்தார். ஆனால் நீதிமன்றங்களுக்குச் சென்று குதிரைப்பந்தயத்தை நடத்திக்கொண்டிருந்தனர்.

முத்தமிழறிஞரின் மகனாக, அவரது கனவை நினைவாக்குகிற வகையில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், கிண்டியில் இருக்கிற ரேஸ் கோர்ஸ் மைதானத்தை கையப்படுத்தி இங்கே ஒரு சுற்றுச்சூழல் பூங்காவிற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

சென்னையின் பிரதான மையப்பகுதியில் அமைந்திருக்கிற 160.86 ஏக்கர் பரப்பளவிலான இந்த இடம் மிக நீண்ட காலமாக அரசின் இந்த இடத்திற்கு குத்தகைத் தராமல் ரூ.700 கோடி ரூபாய் வரை இந்த நிர்வாகத்தினர் பாக்கி வைத்திருந்தார்கள். இந்த குத்தகைப் பாக்கியும் தராமல் குதிரைப் பந்தயத்தை நடத்தி வந்தனர். முதல்வர் அவர்கள் இந்த இடத்தை கையப்படுத்தி ஏராளமான ஆக்கப்பூர்வமானப் பணிகளுக்கு பயன்படுத்தி வருகிறார். அதற்கான போராட்டங்கள் கொஞ்சம், நஞ்சமல்ல.

முதல்வர் அவர்கள் சட்டப்போராட்டங்களிலெல்லாம் வென்று, இந்த இடத்தில் 118 ஏக்கர் நிலப்பரப்பில் மிகப் பெரிய சுற்றுச்சூழல் பூங்கா ஒன்று அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து, அதன்படி முதற்கட்டமாக 25 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.38 கோடி ரூபாய் செலவில் பசுமைப் பரப்பை அதிகரித்தல், ஏராளமான மரங்களை நடுதல், நீர்நிலைகளை ஏற்படுத்துதல் என்று பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தப் பணிகள் முழுமையடைந்தப் பிறகு இந்த இடத்தை எடுத்த உடனே இங்கே உபரியாகிற மழைநீரால் இங்கு இருக்கிற குடியிருப்புத்தாரர்களுக்கு ஏற்படுகிற பாதிப்பை உணர்ந்து ரூ.28 கோடி லிட்டர் தண்ணீரைத் தேக்கி வைக்கிற அளவுக்கு ஆறு குளங்களை வெட்டினார். அந்தக் காலத்தில்தான் மன்னர்கள்தான் குளத்தை வெட்டினார்கள் என்று சொல்வார்கள்.

ஆனால் இன்றைக்கு தமிழ்நாட்டின் முதல்வர்கள் சென்னையின் பிரதான இடத்திலேயே ஆறு குளங்களை வெட்டினார்கள். அதுமட்டுமல்ல இந்த குளங்களிலிருந்து உபரிநீர் வெளியேறுவதற்கு இந்த மைதானத்தைச் சுற்றி ரூ.52 கோடி மதிப்பீட்டில் மழைநீர்வடிகால்வாய்கள் கட்டும் பணிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இதனால் எதிர்காலத்தில் எவ்வளவு பெரிய மழைநீர் பாதிப்பு வந்தாலும், சைதாப்பேட்டை, மடுவின்கரை, கிண்டி, வேளச்சேரி, ஆலந்தூர் போன்ற பகுதி மக்களுக்கு, வெள்ள அபாயம் இருக்காது. இன்னொன்று இவ்வளவு குளங்கள் இங்கு வெட்டப்படுவதால், அதில் மழைநீர் தேங்கி இருப்பதால், இங்கு வசிக்கிற குடியிருப்புத்தாரர்களுக்கு மிகப்பெரிய வறட்சி வந்தால் கூட, அதை தாங்குகிற நிலையில் இருக்கும். 118 ஏக்கரில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற பணிகளைத் தொடர்ந்து, 160 ஏக்கரும், இன்றைக்குப் பயன்பாட்டிற்கு வர இருக்கிறது.

சென்னையின் மையப் பகுதியில் 118 ஏக்கரில் ஒரு சுற்றுச்சூழல் பூங்கா என்பது யாரும் நினைத்தேப் பார்க்க முடியாது. இந்த மகத்தான சாதனையை தமிழ்நாட்டின் முதல்வர் அவர்கள் செய்திருக்கிறார்கள். பெருநகர சென்னை மாநகராட்சியில் இந்த ஐந்தாண்டுகளில் புதியதாக கட்டமைக்கப்பட்டிருக்கிற பணிகளில் மாநகர மக்கள் மிகப் பெரிய அளவில் மகிழ்ச்சி அடையக்கூடிய வகையில் இருக்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2007ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தொல்காப்பிய பூங்கா, 19 கோடி செலவில் 58 ஏக்கர் நிலபரப்பில் அன்றைக்குத் தொடங்கி அந்தப் பணிகள் முடிவுற்று, முத்தமிழறிஞர் 2009இல் தொடங்கி வைத்தார். சுற்றுச்சூழல் பூங்காவைப் பொறுத்தவரை அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா அம்மையார் அவர்கள் தொல்காப்பியர் பூங்கா என்ற பெயரை மாற்றி, அடையாறு பூங்கா என்று பெயரை மாற்றி வைத்ததோடு அல்லாமல், அந்த பூங்காவை செயல்படாமல் மூடியே வைத்திருந்தார்.

பத்தாண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் மீண்டும் ரூ.44 கோடி செலவில் இன்றைக்கு தொல்காப்பியர் பூங்காவை மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்திருக்கிறார். அது மிகப்பெரிய அளவில் தமிழ்நாட்டில் மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் கல்வியை எடுத்துச்சொல்கிற வகையில் ஓர் அமைப்பாக இருக்கிறது.

அதேபோல் சென்னையைப் பொறுத்தவரை இதற்கு பக்கத்தில் காந்தி மண்டபம் இருக்கிறது. அந்த காந்தி மண்டபத்திற்கு பின்னால் சுற்றுலா மையம் உயிரியியல் பூங்கா ஒன்று இருந்தது. வண்டலூரில் ஒரு உயிரியல் பூங்கா தொடங்கியபிறகு இங்கிருந்து இடமாற்றமாகிவிட்டது. ஆட்சிக்கு வந்த பிறகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் ரூ.40 கோடி ரூபாய் செலவு செய்து, காந்தி மண்டபத்தை புனரமைத்து, பழையபடியே , இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் எப்படி இருந்ததோ அப்படி மாற்றியிருக்கிறார்கள்.

வள்ளுவர் கோட்டம் இன்றைக்கு ரூ.80 கோடி ரூபாய் செலவு செய்து, கடந்த காலங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்ன காரணத்திற்காக அதனைக் கொண்டு வந்தார்களோ, பத்தாண்டுகாலம் அது பயன்பாட்டில் இல்லாமல் இருந்தது. அது இன்றைக்கு சென்னையின் பிரதான அடையாளங்களில் ஒன்றாக இருந்துகொண்டிருக்கிறது. 120-30 ஆண்டுகளுக்கு முன்னால் சென்னையின் அடையாளங்களில் ஒன்றாக இருந்த, சென்னையின் விக்டோரியா ஹால், ரூ.33 கோடி ரூபாய் செலவு செய்து அதுவும் இன்றைக்கு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. சென்னையின் பிரதான அடையாளங்களில் ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது.

சைதாப்பேட்டையிலிருந்து - தேனாம்பேட்டை வரை ரூ.677 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3.2 கி.மீ தூரத்திற்கான ஒரு மேம்பாலம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. இந்த இரும்பு மேம்பாலத்தைப் பொறுத்தவரை உலகில்முதன் முறையாக, தரைக்கடியில் ஒரு மெட்ரோ ரயில் போய்கொண்டிருக்கிறபோது, அதற்கு மேல் மேம்பாலம் கட்டப்படுவதென்பது முதன்முறையாக நடைபெறுகிற ஒன்று. ஜெர்மானியத் தொழில்நுட்பத்தோடு, நடைபெற்றுக்கொண்டிருக்கிற பணிகளை முதல்வர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு இருக்கிறார்கள். வருகிற ஜுன் மாதத்தில் சென்னை மக்களுக்கு மிகப் பெரிய அளவில் பயன்பாட்டிற்கு வர இருக்கிறது.

ஹால்டாவிலிருந்து வேளச்சேரிகுருனானக் கல்லூரி வரை ஒரு 3 கி.மீ. தூரத்திற்கு ஒரு மேம்பாலம் ரூ.290 கோடி மதிப்பீட்டில் மற்றொரு மேம்பாலம் ஒன்று முதல்வர் அவர்கள் அடிக்கால் நாட்டி இருக்கிறார். எல்லாவற்றையும் கடந்து சென்னைக்கான குடிநீர் ஆதாரமாய் கேளம்பாக்கம் பகுதியில் பேச்மெண்ட் ஏரியா என்று சொல்லக்கூடிய இடத்தில் ரூ.350 கோடி மதிப்பீட்டில் இரண்டு டி.எம்.சி. தண்ணீரை சேமித்து வைக்கிற அளவுக்கு மிகப்பெரிய குடிநீர் ஏரியை உருவாக்கிற பணியை முதல்வர் அவர்கள் திட்டமிட்டு அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சோழவரம் ஏரி, பூண்டி ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி இந்த ஏரிகளெல்லாம் 300 ஆண்டுகளுக்கு முன்பு ராஜராஜனால் கட்டப்பட்டது. மன்னர்களின் காலத்தில் கட்டப்பட்டது என்று வரலாறு நமக்கு சொல்கிறது. இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்களால், சென்னைக்கான புதிய குடிநீர் ஆதாரமாய் அந்தப் பணிகள் அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

சென்னையைப் பொறுத்தவரை தொல்காப்பியர் பூங்கா ரூ.44 கோடியும், ரூ.80 கோடியில் வள்ளுவர்கோட்டமும், ரூ.33 கோடியில் விக்டோரியா ஹால், ரூ.677 கோடியில் மேம்பாலம், ரூ.290 கோடியில் மற்றொரு மேம்பாலம், ஏற்கெனவே நம்முடைய சர்தார் பட்டேல் சாலையிலிருந்து ராஜீவ்காந்தி சாலை ஓ.எம்.ஆர். வரை ரூ.60 கோடியில் ஒரு எல் வடிவ மேம்பாலம் கட்டி, அதையும்இன்றைக்குப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்திருக்கிறார்.இவைகளைக் கடந்து சைதாப்பேட்டையில் மிகப்பெரிய மருத்துவ அடையாளமாக ரூ.500 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நினைவு மருத்துவமனை கட்டப்பட்டது. இன்றைக்குதினந்தோறும் தமிழகத்திலிருந்து 2000த்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு மருத்துவப் பயன் அளிக்கிறது. இந்தியாவிலேயே பிரத்யேகமான வயது மூத்தோருக்கான மருத்துவமனை, அதே வளாகத்தில் ஆறரை ஏக்கர் நிலப்பரப்பில் குழந்தைகளுக்கான ரூ.417.07 கோடி மதிப்பீட்டில் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் ஆகியவை முதல்வர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

இப்படி சென்னையின் அடையாளத்தை மாற்றுகிற வகையில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு பணிகளை செய்திருக்கிறார்கள். அந்தப் பணிகளில் மகத்தானது, மிகவும் சிறப்பானது கிண்டி ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் அமையவிருக்கிற சுற்றுச்சூழல் பூங்கா. நான் மீண்டும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 1974ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14ஆம் நாள் குதிரைப் பயந்தயத்தை நிறுத்தி, அண்ணா மேம்பாலம் அருகே அதற்கொரு நினைவுசின்னம் அமைத்தார். அதேபோல் கிண்டி ரேஸ்கோர் மைதானத்தில் ஓர் சுற்றுச்சுழல் பூங்கா என்பது தமிழ்நாட்டின் வரலாற்றில் மிகப்பெரிய அளவில் நிலைத்து நிற்கும்.

இவ்வாறு சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு. கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி, குன்றத்தூர் ஒன்றியம், கோவூர், தரப்பாக்கம், இரண்டாம்கட்டளை ஆகிய ஊராட்சிகளில் தோழமைக் கட்சி நிர்வாகிகள், தோழர்களுடன் ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் தா.மோ.அன்பரசன் வீதி வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், தொகுதி பார்வையாளர் பத்மபிரியா, ஊராட்சி மன்ற தலைவர்கள் பா.சுதாகர், எஸ்.பாண்டியன், கே.அரசு, சுகுமார் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

### ச.பரமசிவம் - வே.கௌதமன் - மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி. பங்கேற்பு!

# அண்ணாநகர் 101 வது வட்டத்தில் கழக வேட்பாளர் நே.சிற்றரசுவை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!

## வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் அறிக்கை!

சென்னை, ஏப். 13

அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் நே.சிற்றரசு அவர்களை ஆதரித்து இன்று (13.04.2026 திங்கட்கிழமை) வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் தலைமையில் பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், தொகுதி பார்வையாளர் வே.கௌதமன், வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலையில் வீடு வீடாக சென்று வாக்கு சேகரிக்கின்றனர்.

கீழ்கண்ட இடங்களில் வாக்கு சேகரிப்பு நடைபெறுகிறது.

73, 74, 75, 80, 86 ஆகிய பாகங்களில் மாலை 4.30 மணி அளவில், 73 வது பாகத்தில் இருந்து மண்டபம் ரோடு 1 வது தெரு முதல் 6 வது தெருக்கள், புது மண்டபம் ரோடு, பள்ளி அரசு தெரு, திருவள்ளுவர் நகர், கெனால் தெரு, 1 முதல் 3 தெருக்கள், ஆறுமுகம் சாலை வரை வாக்கு சேகரிக்கின்றனர்.

எனவே வட்டத்திற்குட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் தெரிவித்துள்ளார்.



தியாகராயர் நகர் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் ராஜா அன்பழகன் 117 வது (அ) மற்றும் (ஆ) ஆகிய வட்டங்களில் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தனர். தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை தலைவர் கி.நடராசன் வழிகாட்டுதல்படி, மாநகர் போக்குவரத்துக் கழக ஊழிய முன்னேற்ற சங்க பொதுச் செயலாளர் த.சரவணகுமார், பொருளாளர் கி.சீனிவாசன், அமைப்புச் செயலாளர் நா.செல்வகுமார் மற்றும் நிர்வாகிகள், செயல்வீரர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தேமுதிக வேட்பாளர் அனகை டி. முருகேசனை ஆதரித்து பகுதி கழகச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயக்குமார் தலைமையில் திருநீர்மலை ரங்கநாதர் பெருமாள் திருக்கோயிலில் இருந்து திறந்த ஜீப்பில் வீதி வீதியாக மேற்கொள்ளும் பிரச்சாரத்தை பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து தொடர்ந்து பிரச்சாரத்தை மேற்கொண்டார். துணை மேயர் கோ. காமராஜ் பகுதி கழகச் செயலாளர்கள் வே கருணாநிதி இ.ஜோசப் அண்ணாதுரை இ. எஸ். பெர்னார்ட் ஜி.கே. ரவி அ. தமிழ்மாறன் இரா. நரேஷ் கண்ணா மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளில் தலைவர்கள் நிர்வாகிகள் என ஏராளமானவர்கள் பிரச்சாரத்தில் கலந்து கொண்டு முரசு சின்னத்திற்கு ஆதரவைத் திரட்டினார்கள்



சென்னைக் கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்கு பகுதி அயலக அணி பகுதி அமைப்பாளர் எஸ். எப்.முகம்மது இப்ராஹிம் தலைமையில் 97 (அ) வட்டம், 186, 187, 178 ஆகிய பாகங்களில் வட்டச் செயலாளர் சா.மனோகரன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் க.பிரகதீஸ்வர் ஆகியோர் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழக வெற்றி வேட்பாளர் கார்த்திக் மோகனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தனர். உடன் சி.எம்.பாரதி, எம்.ஜோதிமணி, பி.பென்சிலாஸ், ஆர்.ஆகாஷ், பி.தினேஷ், எஸ்.அஜித்குமார், சி.பிரேம்குமார், பாக நிலை முகவர்கள், சி.முனிரத்தினம், கே.சரவணன், எம்.கணேஷ், பி.சக்தி, எம்.ரிஸ்வான், எம்.இர்பான் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



பூவிருந்தவல்லி சட்ட மன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஆ.கிருஷ்ணசாமி பூவிருந்தவல்லி நகரத்தில் உள்ள 18 வது வார்டுடில் நகரச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை தலைமையில் வீதி வீதியாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். மாவட்ட பிரதிநிதி ஜெ.சுதாகர் ஏற்பாட்டில்பெருந்திரளாக பெண்கள் ஆர்த்தி எடுத்து மலர் தூவி உற்சாக வரவேற்பு அளித்தார்கள். உடன் தொகுதி பார்வையாளர் பிடிசி.செல்வராஜ், நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், மாவட்ட துணை செயலாளர் காயத்ரி ஸ்ரீதர், நகர மன்ற துணை தலைவர் க.ஸ்ரீதர், நகர நிர்வாகிகள் வார்டு செயலாளர்கள் கவுன்சிலர்கள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திருவொற்றியூர் தொகுதியில் போட்டியிடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி வேட்பாளர் எல்.சுந்தர்ராஜனை ஆதரித்து 10வது வட்டத்தில் நடைபெற்ற பிரச்சார பேரணியில் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் தலைமையில், மண்டல குழு தலைவர் தி.மு. தனியரசு முன்னிலையில், இடது கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சௌந்தர்ராஜன் மற்றும் கழகத் தோழர்கள், கூட்டணி கட்சி நண்பர்களோடு தலைமை பொது குழு உறுப்பினர் இரா. முருகேசன் வாக்கு சேகரித்தார்.



ராயபுரம் சட்டமன்றத் தொகுதி மேற்கு பகுதி பாகம் 179 பெரியபாளையத்தம்மன் 03 வதுதெரு. மகளிர்களிடம் திராவிட மாடல் அரசு விடியல் பயணம் திட்டம் மற்றும் மகளிர் உரிமை தொகை சாதனைகளை எடுத்துக்கூறி 53 வது வார்டு மாமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்ட மகளிர் அணி தலைவர் பா.வேளாங்கண்ணி இராயபுரத்தின் வெற்றி வேட்பாளர் டாக்டர் சுபேர்கானுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தார்.